# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2018 சனவரி

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** - 40 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா 16 உப வினாக்களைக் கொண்டது. பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனராயினும் சிலர் வினாப்பத்திரத்தில் தரப்பட்டிருந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்கவில்லை. இங்கு இல. **1.1** தொடக்கம் **1.8** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அவ்விடையின் இலக்கத்தை அதன் வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் எழுதுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் அறிவுறுத்தலைப் பொருட்படுத்தாது வினாப்பத்திரத்திலேயே விடைகளை குறித்து, அவ்வினாப்பத்திரத்தை விடைப்புத்தகத்துடன் இணைந்திருந்தனர்.

மேலும், சில பரீட்சார்த்திகள் இல. **1.9** தொடக்கம் **1.16** வரையான வினாக்களுக்குரிய விடைகளை விடைப்புத்தகத்தில் எழுதியிருந்தனராயினும் **1.1** தொடக்கம் **1.8** வரையான வினாக்களுக்குரிய விடைகளை அதில் குறிப்பிட்டிருக்கவில்லை. அவர்கள் அந்த வினாக்களுக்கான விடைகளை வினாப்பத்திரத்திலேயே குறித்திருந்தனராயினும் விடைப்புத்தகத்தில் எழுதத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, பரீட்சார்த்திகள் இலகுவாக பெற்றிருக்கக்கூடிய இந்த வினாக்களுக் கான புள்ளிகளை அவர்களால் பெறமுடியவில்லை

இந்த உபவினாக்களுக்கான விடையளிப்பில் அடையாளம் காணப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன:

**வினா இல. 1.2**

இவ்வினாவுக்கான சரியான விடை இலக்கம் (1) இல் வழங்கப்பட்ட ‘‘அட்டுறு கோட்பாடு’’ ஆக இருந்தபோதிலும், பல பரீட்சார்த்திகள் விடை இலக்கம் (3) இல் வழங்கப்பட்ட ‘‘உரிமக் கோட்பாட்டினைத்’’ தெரிவுசெய்திருந்தனர்.

**வினா இல. 1.3**

மூல ஆவணம் பற்றிய அறிவு பல பரீட்சார்த்திகளிடம் குறைவாகவே இருந்தது. இவ்வினாவுக்கான சரியான விடை இல. (1) கொள்வனவுக் கட்டளை என்றபோதிலும் பல பரீட்சார்த்திகள் இல. (4) கொள்வனவுப் பட்டியல் என்பதைத் தெரிவுசெய்திருந்தனர்.

**வினா இல. 1.8**

கணக்கீட்டு மென்பொருள் பொதிகள் பற்றிய தெளிவான புரிந்துணர்வு காணப்படாமையால், பல பரீட்சார்த்திகள் சரியான விடையான இல. (2) விரைவுப் புத்தகம் என்பதற்குப் பதிலாக தவறான விடைகளைத் தெரிவுசெய்திருந்தனர்.

**வினா இல. 1.9**

சில பரீட்சார்த்திகள் தொடர்ந்து இயங்கும் தன்மைக் கோட்பாட்டிற்குப் பதிலாக உரிமக் கோட்பாடு பற்றி விவரித்திருந்தனர்.

**வினா இல. 1.14**

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு தவறான விடைகளையே வழங்கியிருந்தனர். சரியாக விற்பனைக் கிரயத்தைக் கணிப்பதற்கான ஆற்றல் காணப்படாமையே இதற்கான காரணமாக அமைந்திருக்கலாம்.

**வினா இல. 1.15**

சரியான இரட்டைப் பதிவுகளைக் குறிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளைச் சமர்ப்பித்திருந்தனர். வேறு சிலர் இரட்டைப் பதிவுகளைத் தந்திருந்த போதிலும் அதற்கான எண் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஒரேயொரு பதிவு மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

## பகுதி B

**வினா இல. 02** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா தனியுடைமை வியாபாரம் ஒன்றின் பரீட்சை மீதியைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்தது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(1) பரீட்சை மீதி பற்றிய அடிப்படை அறிவு காணப்படாமையால், சில பரீட்சார்த்திகள் ஐந்தொகையைத் தயாரித்திருந்தனர்.

(2) வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப முதலீடு ரூ. 1,000,000/- ஆனது ஆரம்ப மூலதனமாக இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் இம்மூலதனத்தினை ஒரு சொத்தாகக் கருதியிருந்ததுடன் பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்திலும் குறிப்பிட்டிருந்தனர்.

(3) வியாபாரக் கடன்கொடுத்தோர் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளை தயாரிப்பதில் புரிந்துணர்வு காணப்படாமையால் சில பரீட்சார்த்திகள் அந்தக் கணக்குகளைப் பயன்படுத்தி சரியான விற்பனை மற்றும் கொள்வனவுப் பெறுமதிகளை கண்டுபிடிப்பதற்குத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் தரப்பட்ட இறுதி மீதிகள் மற்றும் காசேட்டிலுள்ள ஊடுசெயல் களைச் செம்மையாக்கம் செய்வதன் மூலம் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளைக் கணிப்பதற்கான அறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

(4) சில பரீட்சார்த்திகள் முன் செலுத்தப்பட்ட கடை வாடகை மற்றும் அட்டுறு மின் கட்டணம் ஆகியவற்றைச் சரியாகச் செம்மையாக்கம் செய்வதற்கும் பரீட்சை மீதியிலும் அவற்றைக் குறிப்பிடுவதற்கும் தவறியிருந்தனர்.

**வினா இல. 03** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா பகுதி (a) மற்றும் பகுதி (b) என 2 பகுதிகளைக் கொண்டது. பகுதி (a) ஆனது வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை தயாரிப்பது பற்றிய அறிவையும் பகுதி (b) ஆனது தொங்கற் கணக்கைத் தயாரிப்பது பற்றிய அறிவையும் பரீட்சித்திருந்தன.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன :

**(a) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரித்தல்**

(1) வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாத சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்புப் பதிவு களுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்து நேரத்தை வீணடித்திருந்தனர்.

(2) இன்னும் சில பரீட்சார்த்திகள் வரவு மீதிகளை செலவுப் பக்கத்திலும் செலவு மீதிகளை வரவுப் பக்கத்திலும் மாற்றிக் குறித்திருந்தனர்.

(3) இவ்வினாவின் 4 ஆவது உருப்படியின் கீழ் வழங்கப்பட்ட ஊடுசெயல் தொடர்பில், பல பரீட்சார்த்திகளால் தொங்கற் கணக்கு சரியாக வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் மொத்தப் பெறுமதியான ரூ. 40,000/- வட்டி வருமானக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், சில பரீட்சார்த்திகள் பிழையாக மொத்தப் பெறுமதியையும் வட்டிச் செலவுக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கைப் பயன்படுத்தாது வட்டி வருமானக் கணக்கிற்கும் வட்டிச் செலவுக் கணக்கிற்குமிடையில் இதனைச் செம்மையாக்கம் செய்வதற்கு முயற்சித்திருந்தனர்.

**(b) தொங்கற் கணக்கு**

(1) சில பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கைத் தயாரிப்பது தொடர்பில் சரியான அறிவினைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தொங்கற் கணக்கு இன்றி நாட்குறிப்புப் பதிவுகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(2) தொங்கற் கணக்கின் வரவு மீதி ரூ.700,000/- அக்கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(3) சில பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கின் செலவுப் பக்கத்தில் வரவுப் பதிவுகளையும் வரவுப் பக்கத்தில் செலவுப் பதிவுகளையும் குறித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(4) சில பரீட்சார்த்திகள் வரவு மீதி ரூ. 700,000/- ஐப் புறக்கணித்திருந்ததுடன் நாட்குறிப்புப் பதிவுகளுடன் தொடர்புடைய மீதிகளை மாத்திரமே தொங்கற் கணக்கில் பதிவு செய்திருந்தனர்.

**வினா இல. 04** - 10 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன :

(1) உற்பத்திக் கணக்கின் வடிவம் தொடர்பான விளக்கமின்மை காரணமாக, சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கணக்கினை வருமான, செலவுக் கணக்கின் வடிவத்தில் தயாரித்திருந்ததுடன் இன்னும் சிலர் ஐந்தொகை வடிவில் தயாரித்திருந்தனர்.

(2) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட வேண்டுமென வினாவில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் உற்பத்திக் கணக்கின் இறுதியில் உற்பத்தி மேந்தலைகளின் கீழ் அதனைப் பதிவுசெய்திருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் தொழிற்சாலையுடன் தொடர்புடைய முகாமையாளரின் சம்பளத்தை முதன்மைக் கிரயத்தின் கீழ் ஒரு நேர்ச் செலவாகப் பதிவுசெய்திருந்தனர். ஆயினும் அது மேந்தலைக் கிரயங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) சிலர் உற்பத்தி செய்யப்பட்ட மரத்தாலான சாப்பாட்டு மேசை ஒவ்வொன்றிற்கும் செலுத்தப்பட்ட ஊக்கத்தொகையைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். அது முதன்மைக் கிரயத்தின் கீழ் ஒரு நேர் செலவாகப் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும் சிலர் அதனை மேந்தலைக் கிரயங்களின் கீழ் பதிவுசெய்திருந்தனர்.

தொழிற்சாலையுடன் தொடர்புடைய மொத்த கட்டட வாடகை மேந்தலைக் கிரயத்திற்கு மாத்திரம் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் அது பிழையாக உற்பத்தி மேந்தலைகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**வினா இல. 05** - 10 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா பகுதி (a) மற்றும் பகுதி (b) என 2 பகுதிகளைக் கொண்டது. பகுதி (a) ஆனது கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான தாக்கத்தைப் பரீட்சித்திருந்த அதேவேளை பகுதி (b) ஆனது விற்பனை நாளேட்டைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்படுகின்றன :

**(a) கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான தாக்கம்**

(1) சில பரீட்சார்த்திகளிடம் கணக்கீட்டுச் சமன்பாடு பற்றிய தெளிவான விளக்கம் காணப்படவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சிலர் (+/-) குறிகள் இன்றி ஊடுசெயல்களின் பெறுமதியைக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் மீள்விற்பனைக்காகக் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.650,000/- பெறுமதியான பொருட்களை காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கருதியிருந்ததுடன் அதனை தொக்குகளுடன் கூட்டி காசிலிருந்து கழித்திருந்தனர். இன்னும் சிலர் அந்த ஊடுசெயலை ஒரு கடன் விற்பனையாகக் கருதியிருந்ததுடன், தொக்கிலிருந்து ரூ. 65,000/- ஐக் கழித்து கடன் கொடுத்தோரில் ரூ. 65,000/- ஐக் கூட்டியிருந்தனர்.

(3) உருப்படி (3) இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ஊடுசெயலுக்காக சில பரீட்சார்த்திகள் பொருட்கள் எடுப்பனவு என்பதற்குப் பதிலாக காசு எடுப்பனவு என்பதாகக் கருதியிருந் ததுடன் அதனைக் காசின் கீழ் செம்மையாக்கம் செய்திருந்தனர்.

(4) ரூ. 5000/- தொலைபேசிக் கட்டணத்திற்காக ரூ. 4,000/- கொடுப்பனவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த உருப்படி (4) இற்குப் பல பரீட்சார்த்திகள் பிழையான விடைகளையே வழங்கியிருந்தனர். சிலர் அட்டுறு தொலைபேசிக் கட்டணம் ரூ. 1000/- ஐப் புறக்கணித்து கொடுப்பனவான ரூ. 4000/- ஐ மாத்திரம் பதிவுசெய்திருந்தனர். இன்னும் சிலர் செலவு ஒன்றாகக் கருதப்படுகின்ற உரிமையாண்மையிலிருந்து மாதாந்தத் தொலைபேசிக் கட்டணம் ரூ. 5000/- ஐ கழித்திருக்கவில்லை.

(5) உருப்படி (5) இல் குறிப்பிடப்பட்டிருந்த ரூ. 200,000/- கிரயமான பொருட்கள் ரூ.220,000/- இற்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட விடயத்தைச் சில பரீட்சார்த்திகள் காசுக்கு விற்பனை செய்யப்பட்டதாகக் கருதி, உரிமையாண்மை நிரலிலுள்ள தொக்கு நிரலில் -200,000 இனையும் காசு நிரலில் +20,000 இனையும் பதிவுசெய்திருந்தனர்.

**(b) விற்பனை நாளேட்டைத் தயாரித்தல்**

(1) சில பரீட்சார்த்திகளிடம் விற்பனை நாளேட்டின் அடிப்படை வடிவம் தொடர்பில் விளக்கமின்மை காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சிலர் உரிய வடிவத்தின் மாதிரியைப் பயன்படுத்தாது விடையளித்திருந்தனர்.

(2) வியாபாரக் கழிவுகளின் கழிப்பனவு விற்பனை நாளேட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்றபோதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் வியாபாரக் கழிவைக் கழித்ததன் பின்னரான பெறுமதியை மாத்திரம் பதிவுசெய்திருந்தனர்.

(3) வியாபாரக் கழிவு ஊடுசெயல் இல. (2) இற்கு மட்டுமே ஏற்புடையதாக இருந்தபோதிலும் சிலர் சகல விற்பனைகளுக்கும் வியாபாரக் கழிவுகளைப் பிரயோகித்திருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06** - 20 புள்ளிகள்

(கட்டாய வினா)

இவ்வினா பகுதி (a), பகுதி (b) என 2 பகுதிகளைக் கொண்டது. இது தனியுடைமை வியாபாரம் ஒன்றின் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பகுதி (a) ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதையும் பகுதி (b) நிதி நிலைக் கூற்றைத் தயாரிப் பதையும் பரீட்சித்திருந்தது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்படுகின்றன :

**(a) முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரித்தல்**

(1) முற்றடக்க வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள் பற்றிய விளக்கமின்மை காரணமாக, சில பரீட்சார்த்திகள் காணி, கட்டடங்கள், கணினிகள், விநியோக லொறி போன்ற நிதி நிலைக் கூற்றில் பதிவுசெய்யப்பட வேண்டிய உருப்படிகளையும் முற்றடக்க வருமானக் கூற்றில் குறிப்பிட்டிருந்தனர்.

(2) விற்பனைத் தரகு (பணிசை) என்பது ஒரு செலவாக இருந்தபோதிலும் சிலர் அதனை ஓர் வருமானமாகக் கருதி, வருமானக் கூற்றில் பதிவுசெய்திருந்தனர். அத்துடன், வங்கி மேலதிகப்பற்று வட்டியும்கூட ஓர் வருமானமாக சில பரீட்சார்த்திகளால் பதிவுசெய்யப் பட்டிருந்தது.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் காப்புறுதி முற்கொடுப்பனவுக்கான செம்மையாக்கத்தைச் சரியாகச் செய்யவில்லை.

(4) ஐயக்கடன்களுக்கான 10 % பொதுவான ஏற்பாடானது அறவிடமுடியாக் கடன் ரூ.50,000/- ஐக் கழித்ததன் பின்னர் வியாபார வருமதியாகவுள்ள மீதித் தொகைக்கே செய்யப்பட வேண்டும் என்றபோதிலும் சிலர் அதனைப் புறக்கணித்து வியாபார வருமதியாகவுள்ள மொத்தப் பெறுமதி மீதும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றைத் தயாரித்தல்**

(1) நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்படக்கூடிய பதிவுகள் பற்றிய அடிப்படை விளக்கமின்மை காரணமாக கொள்வனவுகள், விற்பனை, ஆரம்பத் தொக்கு மற்றும் சில ஏனைய செலவுகள் என்பன நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(2) முற்கொடுப்பனவு செய்யப்பட்ட காப்புறுதி மற்றும் அட்டுறு மின்சாரச் கட்டணம் என்பன நிதி நிலைக் கூற்றில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(3) அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு என்பன சரியாகக் கணிப்பீடு செய்யப்படவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் நேர்கோட்டு முறையில் சரியாக பெறுமானத்தேய்வைக் கணிப்பிடாததன் காரணமாகவும் சரியான திரள் தேய்மானப் பெறுமதிகளைக் குறிப்பிடாததன் காரணமாகவும் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

(5) நிதி நிலைக் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

\- - -

## <u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்குக் கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:

(1) புதிய பாடத்திட்டத்தை முழுமையாகப் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தைச் செலுத்தவும்.

(2) வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையில்லாதவற்றை எழுத வேண்டாம்.

(3) புத்தகங்கள், கையேடுகள், கடிதங்கள், நாட்குறிப்புகள் போன்ற இப்பாடத்துடன் சம்பந்தப்பட்ட வற்றைப் பயன்படுத்துங்கள்.

(4) அடிப்படைக் கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங்கண்டு வினாக்களுக்கு விடையளிக்கத் தேவையான திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

(5) கையெழுத்தைத் தெளிவாக எழுதுவதுடன் வினாக்களுக்கும் சரியாக இலக்கமிடுங்கள்.

(6) வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணித்தல்கள் மற்றும் செய்முறை வேலைகள் ஆகியவற்றையும் காட்டுங்கள்.

(7) அதிகளவு கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

(8) உங்கள் நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்துங்கள்.

(9) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள் போன்றவை சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சியுங்கள்.

(10) நல்ல முன்னாயத்தத்துடனும் பரீட்சையில் சித்தியடையும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்கு முகங்கொடுங்கள்.

- * * * -